# Chapter
# இந்தியர் – வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

---

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

Question 1.
மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.
அ) சேமிப்பு மின்கலன்கள்
ஆ) எஃகு தயாரிப்பு
இ) செம்பு உருக்குதல்
ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு
**விடை:**
ஆ) எஃகு தயாரிப்பு

Question 2.
ஆந்த்ரசைட் நிலக்கரி …………… கார்பன் அளவை கொண்டுள்ளது.
அ) 80% – 95%
ஆ) 70% க்கு மேல்
இ) 60% – 70%)
ஈ) 50% க்கும் குறைவு
**விடை:**
அ) 80% – 95%

Question 3.
பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் ………………………
அ) ஆக்ஸிஜன்
ஆ) நீர்
இ) கார்பன்
ஈ) நைட்ரஜன்
**விடை:**
இ கார்பன்

Question 4.
தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம் ……………………..
அ) சேலம்
ஆ) சென்னை
இ) மதுரை

ஈ) கோயம்புத்தூர்
**விடை:**
ஈ) கோயம்புத்தூர்

Question 5.
இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் ……………………
அ) குஜராத்
ஆ) இராஜஸ்தான்
இ) மகாராஷ்டிரம்
ஈ) தமிழ்நாடு
**விடை:**
இ மகாராஷ்டிரம்

Question 6.
மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம் …………………
அ) உயிரி சக்தி
ஆ) சூரியன்
இ) நிலக்கரி
ஈ) எண்ணெய்
**விடை:**
ஆ) சூரியன்

Question 7.
புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம் ……………….
அ) ஜார்கண்ட்
ஆ) பீகார்
இ) இராஜஸ்தான்
ஈ) அசாம்
**விடை:**
அ) ஜார்கண்ட்

Question 8.
சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது ……………….
அ) போக்குவரத்து
ஆ) கனிமப்படிவுகள்
இ) பெரும் தேவை
ஈ) மின்சக்தி கிடைப்பது
**விடை:**
ஆ) கனிமப்படிவுகள்

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பாக்சைட் | அ) சிமெண்ட் |
| 2. | ஜிப்சம் | ஆ) வானூர்தி |
| 3. | கருப்பு தங்கம் | இ) மின்சாதனப் பொருள்கள் |
| 4. | இரும்பு தாது | ஈ) நிலக்கரி |
| 5. | மைக்கா | உ) மேக்னடைட் |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | பாக்சைட் | **ஆ) வானூர்தி** |
| 2. | ஜிப்சம் | **அ) சிமெண்ட்** |
| 3. | கருப்பு தங்கம் | **ஈ) நிலக்கரி** |
| 4. | இரும்பு தாது | **உ) மேக்னடைட்** |
| 5. | மைக்கா | **இ) மின்சாதனப் பொருள்கள்** |

## III. சுருக்கமான விடையளி.

Question 1.
வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.
**விடை:**
இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் “இயற்கை வளம்” என்று அழைக்கப்படுகிறது.

1. புதுப்பிக்கக்கூடிய வளம் – சூரிய ஆற்றல்
2. புதுப்பிக்க இயலாத வளம் – நிலக்கரி

Question 2.
கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?
**விடை:**

- ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும்.
- கனிமங்கள் இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை அ. உலோகக்கனிமங்கள், ஆ. அலோகக்கனிமங்கள்.

Question 3.
மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பீடுக.
**விடை:**

- இது இரும்பு எஃகு மற்றும் உலோகக் கலவை உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும்.
- வெளுக்கும் தூள், பூச்சிக்கொல்லிகள், வண்ணப்பூச்சிகள், மின்கலன்கள் போன்றவைத் தயாரிப்பதற்கு மெக்னீசியம் பயன்படுகின்றது.

Question 4.
இயற்கை எரிவாயு என்றால் என்ன?
**விடை:**

- இயற்கை எரிவாயு பொதுவாக பெட்ரோலிய பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது.
- இது இயற்கையாக உருவாகும் ஒரு நீர்மகரிம வாயுவாகும்.
- இவற்றின் பெரும்பகுதி மீத்தேன் வாயுவும் பல்வேறு அளவுகளில் உள்ள உயர் அல்கேன்கள் கலந்த கலவைகளால் ஆனது.

Question 5.
நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
**விடை:**

- ஆந்தரசைட்: 80 முதல் 90%
- பிட்டுமினஸ் : 60 முதல் 80%
- பழுப்பு நிலக்கரி: 40 முதல் 60%
- மரக்கரி: 40% கும் குறைவு.

Question 6.
இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.
**விடை:**
மேற்கு வங்காளம், ஆந்திரப்பிரதேசம், பீகார், அசாம், உத்தரப்பிரதேசம்,

சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா சணல்கள் உற்பத்தி செய்கின்ற மாநிலங்களாகும்.

**Question** 7.
இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.
**விடை:**
மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள் :

- மும்பை ஹை எண்ணெய் வயல் (65% மிகப்பெரியது)
- குஜராத் கடற்கரை (2வது பெரியது)
- அகமதாபாத் – கலோல்பகுதி

## IV. வேறுபடுத்துக.

**Question** 1.
புதுப்பிக்க இயலும் மற்றும் புதுபிக்க இயலாத வளங்கள்.
**விடை:**

| வ.எண் | புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலாவளங்கள் |
|---|---|---|
| 1. | வளங்கள் அவற்றின் பயன்பாட்டிற்குப் பிறகு இயற்கையாக மீளுருவாக்கம் கொண்டவை. | புதுப்பிக்க முடியாத வளங்கள் பயன்பாட்டிற்குப் பிறது மிண்டும் மாற்ற முடியாத ஆதாரங்கள். |
| 2. | சூரிய சக்தி, காற்றாலை, உயிர்வாயு போன்றவை. | நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு. |

**Question** 2.
உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்.
**விடை:**

| வ.எண் | உலோகக் கனிமங்கள் | அலோகக் கனிமங்கள் |
|---|---|---|
| 1. | ஒன்று மற்றும் அதற்கு மேற்பட்ட உலோகக் கூறுகளைக் கொண்டது. | இதில் உலோகத் தாதுக்கள் இல்லை. |
| 2. | எ.கா. இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்சைட். | எ.கா. மைக்கா, சுண்ணாம்பு, ஜிப்சம். |

**Question** 3.
வேளாண் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.

**விடை:**

| வ.எண் | வேளாண் தொழிலகங்கள் | கனிமம் தொழிலகங்கள் |
|---|---|---|
| 1. | இந்த தொழில்கள் விவசாய பொருட்களை அவற்றின் அடிப்படை மூலப்பொருட்களாக பயன்படுகிறது. | உலோக மற்றும் உலோகமற்ற தாதுக்கள் இரண்டையும் மூலப்பொருட்களாக பயன்படுகிறது. |
| 2. | பருத்தி தொழிற்சாலை | இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை |

Question 4.
சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்.
**விடை:**

| வ.எண் | சணல் ஆலைகள் | சர்க்கரை ஆலைகள் |
|---|---|---|
| 1. | சணல் ஏற்றுமதியில் இந்தியா இரண்டாம் இடம். | பிரேசிலுக்கு அடுத்தபடியாக கரும்பு உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடம். |
| 2. | முக்கிய சணல் பகுதிகள்: மேற்கு வங்கத்தில் உள்ளன. | உலக சர்க்கரை உற்பத்தியில் உத்திரபிரதேசம் முன்னிலை வகிக்கிறது. |

Question 5.
மரபு சார் மற்றும் மரபு சாரா எரிசக்தி.
**விடை:**

| வ.எண் | மரபு சார் எரிசக்தி | மரபு சாரா எரிசக்தி |
|---|---|---|
| 1. | ஆற்றல் முலங்கள்:<br>வெப்ப சக்தி, அணுசக்தி | ஆற்றல் முலங்கள்:<br>நீர்சக்தி, சூரியசக்தி, காற்றாலை ஆற்றல், உயிர்ம ஆற்றல், அலை மற்றும் அலை ஆற்றல். |
| 2. | இது நிலக்கரி, டீசல், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு போன்ற புதை படிவ எரிபொருளிலிருந்து உருவாகிறது. | நீரிலிருந்து உருவாகும் மின்சாரம் நீர்மின்சாரம் என்று அழைக்கப்படுகிறது. |

## V. ஒரு பத்தியில் விடையளி.

Question 1.
இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
**விடை:**
பருத்தி நெசவாலைகள் :

- இந்தியா இத்துறையில் உலகின் இரண்டாம் இடத்தில் உள்ளது.

- பாரம்பரிய தொழில்களான கைவினைப்பொருள்கள், சிறிய விசைத்தறிகள் போன்றவை லட்சக்கணக்கிலான கிராமப்புற மற்றும் புறநகர் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் ஆதாரங்களாக உள்ளன.
- பருத்தி இழையிலிருந்து , விதைகளை பிரித்தெடுக்கும் முறைக்கு ஜின்னிங் என்று பெயர்.
- மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பத காலநிலை மும்பைத் துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி, சிறந்த போக்குவரத்து வசதி ஆகியன மும்பையில் அதிக அளவு பருத்தி நெசவாலைகள் இருப்பதற்கு காரணங்களாக அமைகிறது.
- மகாராஷ்டிரம், குஜராத் மேற்கு வங்காளம் உத்திரப்பிதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன. இதனால் கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.
- ஈரோடு திருப்பூர், கரூர், சென்னை , திருநெல்வேலி, மதுரை தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகியன மாநிலத்தின் பிற முக்கிய நெசவாலை நகரங்களாகும்.

Question 2.
இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
**விடை:**

- இந்தியத் தொழிலகங்கள் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. அவற்றில் சில முக்கியப் பிரச்சினைகள் கீழே பட்டியிலிடப்பட்டுள்ளன.
- மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்.
- தொழிலகங்கள் நிறுவுவதற்கு ஏற்ற பரந்த நிலபரப்பு இல்லாமை.
- கடன் பெறுவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள்.
- கடனுக்கான அதிக வட்டி விகிதம்.
- மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை.
- ஊழியர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழில் முறை பயிற்சிகள் இல்லாமை.
- தொழிற்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை.